**முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**OS.No**. 362/2018

நாள் : 03.07.2025

**DW1** பெயர் : எம்.சுப்பிரமணி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** (பிரதிவாதி தரப்பில் 1ம் சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் தொடர்ச்சியாக குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஜானகி எனது மகள் ஆகும். 3ம் பிரதிவாதி ஜவஹர்லால்நேரு எனது மகன் ஆகும். நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆன எனது மகளுக்காகவும் சேர்த்து நடத்துகிறேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியான எனது மகனுக்காக இந்த வழக்கை நான் நடத்தவில்லை என்றால் சரிதான், எனது மகன் என்னிடம் பேசுவது கிடையாது. எனது மனைவிக்கு அவர் உயிருடன் இருந்தபோது எந்த வங்கியில் கணக்கு இருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் எனக்கு வங்கி கணக்கு எதுவும் கிடையாது. நான் இருக்கும் வீடு எனது மனைவி பெயரில் உள்ளது என்றால் சரிதான், நான் சம்பாதித்து எனது மனைவி பெயரில் வாங்கியது ஆகும். எனது மனைவி இறந்த பின்பு நானும், எனது மகன், மகள் ஆகியோர்கள் தான் என் மனைவியின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மனைவி உயிருடன் இருந்தபோது அவருக்கு இன்சூரன்ஸ் இருந்ததா என்றால் இருந்தது, அது ரூபாய் ஒரு லட்சம் வந்தது. அந்த ஒரு லட்சம் ரூபாயை நாங்கள் மூவரும் தான் பிரித்துக் கொண்டோம் என்றால் இல்லை, முழுவதையும் நானே எடுத்துக் கொண்டேன். மேற்படி இன்சூரன்ஸ் தொகையை நானே எடுத்துக் கொள்ள எனது மகனும், மகளும் அனுமதி தரவில்லை என்றால் இல்லை, என்னை நாமினியாக போட்டதால் நான் பணத்தை எடுத்துக் கொண்டேன். வீட்டை தவிர எனது மனைவி பெயரில் வேறு என்னென்ன சொத்துக்கள் இருந்தது என்றால் வேறு சொத்துக்கள் இருந்தது, அவர் இறந்த பிறகு அனைத்து சொத்துக்களையும் விற்பனை செய்துவிட்டோம். மேற்படி சொத்துக்களை விற்பனை செய்தது பிரதிவாதிகளான நாங்கள் மூவரும் தான் என்றால் சரிதான். (வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)